**சுருக்கம்**

பேரூராட்சிகள் நிர்வாகம் – 2021–22 – மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிகளில் ரூ.3.00 கோடிக்கு மேல் உள்ள பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை**

**அரசாணை (ப) எண். 86** **நாள்: 11.03.2022**

**பிலவ வருடம் மாசி – 27**

**திருவள்ளுவர் ஆண்டு – 2053**

**படிக்க:**

1. அரசாணை (ப) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள்.12.04.2008.
2. அதிகாரம் வழங்கப்பட்ட குழுவின் (Empowered Committee) கூட்ட நடவடிக்கை குறிப்பு, நாள் 17.12.2021.
3. பேரூராட்சிகளின் ஆணையரின் கடித எண். 12524/ 2021/உ3 நாள். 27.12.2021.

*******

**ஆணை:–**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் 2021–22–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.203,75,57,000/– (ரூபாய் இருநூற்று மூன்று கோடியே எழுபத்தைந்து இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் 10.11.2021–ம் நாளிட்ட அதிகாரம் வழங்கப்பட்ட குழுவின் (Empowered Committee) கூட்ட நடவடிக்கையில் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.103,51,84,000/– (ரூபாய் நூற்று மூன்று கோடியே ஐம்பத்தொன்று இலட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறை ஆணைகளின்படி நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்ட குழுவின் (Empowered Committee) கூட்ட நடவடிக்கையில் 2021–2022–ஆம் ஆண்டிற்கான மூலதன மானிய நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.137,34,00,000/– (ரூபாய் நூற்று முப்பத்தேழு கோடியே முப்பத்து நான்கு இலட்சம் மட்டும்) (ஒதுக்கீடு–ரூ.100,23,73,000/–) 63 பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் பேரூராட்சிகளின் ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளின் ஆணையருக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பு ரூ.3.00 கோடி வரையுள்ளதால் ஒப்புதல் வழங்கப்பட்ட 63 பணிகளில் 58 பணிகளுக்கு பேரூராட்சிகளின் ஆணையரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கீழ்காணும் 5 பணிகளின் மதிப்பீட்டு தொகை ரூ.3.00 கோடிக்கும் அதிகமாக உள்ள நிலையில் அரசிடமிருந்து உரிய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என்றும், கீழ்காணும் 5 பணிகளை மூலதன மானிய நிதியின் கீழ் முழு மான்யமாக செயல்படுத்திட அனுமதித்து நிர்வாக அனுமதி வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | பணிகளின் விவரம் | மதிப்பீடு | ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|
| | | | | 2021-22 | 2022-23 |
| 1 | அவிநாசி | வணிக வளாகம் கட்டுதல் | 600.00 | 300.00 | 300.00 |
| 2 | பெருந்துறை | சந்தை மேம்பாடு | 350.00 | 175.00 | 175.00 |
| 3 | ஒடைப்பட்டி | நீர்நிலை மேம்பாடு | 450.00 | 225.00 | 225.00 |
| 4 | வடமதுரை | | 450.00 | 225.00 | 225.00 |
| 5 | சேந்தமங்கலம் | | 400.00 | 200.00 | 200.00 |
| | **மொத்தம்** | | **2250.00** | **1125.00** | **1125.00** |

3. பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.2250.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.7135/நிதி(நநி(ம)கு.வ/2022, நாள்: 26 .02.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**// ஆளுநரின் ஆணைப்படி //**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை -600 028.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்.
மாநில கணக்காயர், சென்னை -600 018/35.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
(நிதிக்குழு) துறை, சென்னை -600 009.
**நகல்:-**
நிதி (ந.நி (ம) கு.வ./நிதிக்குழு-4/ நிதிக்குழு-1) துறை, சென்னை - 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**